பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

கடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 தை 4 வியாழக்கிழமை (18-01-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 53

# வல்வையில் நேற்று ஷெல்லுக்கு 5பேர் பலி!

## ஏழு பேர் படுகாயம் கட்டடங்கள் சேதம்

வடமராட்சி, ஜனவரி 18

வடமராட்சியில் வல்வெட்டித்துறை மற்றும் பகுதிகள் மீது நேற்றுக் காலை ஸ்ரீலங்காப் படையினர் நடத்திய ஷெல் தாக்குதல்களில் ஐந்து பேர் பலியானார்கள்; ஏழு பேர் படுகாயமுற்றனர்; ஆலயம், கடைகள், வீடுகள் என பல கட்டடங்கள் சேதமடைந்தன.

பலியான ஐந்துபேரில் மூவர் உடல் சிதறி அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை 8.00 மணிக்கு வல்வெட்டித்துறை, ஊரிக்காடு, மயிலியதனை, தொண்டமனாறு பகுதிகளை நோக்கியே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

காலை 7.30 மணிக்கு காங்கேசன்துறைப் பக்கத்திலிருந்து வந்த கடற்படைப் படகு ஒன்று வல்வெட்டித்துறைக் கடற்பகுதியில் தரித்து நின்றது.

அதன் பின்னர் சுமார் அரை மணி நேரம் கழித்து ஷெல் தாக்குதல் ஆரமபமானது.

முதல் ஷெல் வல்வை மீன்பிடித்துறைப் பக்கமாக வீடு ஒன்றின் மீது விழ்ந்து வெடித்தது. இதனால் வீடு பலத்த சேதமடைந்தது.

அச்சமயம் மீன்பிடித்துறையில் மீன் விற்க, வாங்க என வந்தோரும், மீன்பிடித்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## காயமுற்ற ஏழு பேர்

வடமராட்சி, ஜன. 18

வல்வெட்டித்துறைப் பகுதி மீது நேற்று நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களில் காயமுற்ற ஏழு பேரின் விவரம் வருமாறு:-

வல்வெட்டித்துறைச் சந்திப் பகுதியில் விழ்ந்த ஷெல்லினால் —

★ முருகுப்பிள்ளை வேலும் மயிலும் (மயில் வாகனம்) (வயது 47) — வல்வைச் சந்தியில் பழக்கடை வைத்திருப்பவர்.

★ ஜெயவர்த்தன நடனலிங்கம் (வயது 40)

★ அருச்சுனராசா சீவரத்தினம் (வயது 38)— வல்வெட்டித்துறை தனிப்படைக் குடியோற்றத்தைச் சேர்ந்த இவர் சந்தையில் கூலிக்கு வண்டில் செலுத்தும் தொழில் செய்துவந்தார்.

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## பலியான ஐவர் விவரம்

வடமராட்சி, ஜன. 18

வல்வெட்டித்துறைப் பகுதி மீது நேற்று நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களில் பலியான ஐந்து பேரின் விவரம் வருமாறு:-

★ ஐயாத்துரை பாலச்சந்திரன் (வயது 50)

★ யோகச்சந்திரன் பாமினி (வயது 16)

- இவர்கள் இருவரும் சிவபுரம் வீதியைச் சேர்ந்தவர்கள். சந்தைக்குப் பொருள்கள் வாங்க வந்த சமயம் ஷெல்லுக்கு இரையானார்கள்.

★ மாணிக்கம் மகோற்கடமூர்த்தி (வயது 70) — வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இவர் வல்வைச் சந்தியில் கைக்கிள் கடை வைத்திருந்தவர்.

- இந்த மூவரின் உடல்க

(6 ஆம் பக்கம் பார்க்க

## தந்திரிமலை தாக்குதலில் ஊர்காவலர் ஒருவர் பலி!

அநுராதபுரத்துக்கு 30 மைல் மேற்கே தந்திரிமலை கம்பியாவ என்ற இடத்தில் உள்ள பொலீஸ் காவலரண் ஒன்றின் மீது கடந்த ஞாயிறு இரவு விடுதலைப் புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் ஊர்காவலர் ஒருவர் கொல்லப்பட்டார்.

சுமார் பத்து விடுதலைப் புலிகளைக் கொண்ட அணி ஒன்று வில்பத்து காடு ஊடாக வந்து இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும் —

விடுதலைப் புலிகளுக்கு இத் தாக்குதலில் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்றும —

இத் தாக்குதலை அடுத்து அப்பகுதியில் பாதுகாப்பு படையினர் தேடி அழிக்கும் பணியை மேற்கொண்டனர் என்றும் —

பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## தினசரி 50 லொறிகளில் வன்னிக்குப் பொருள்கள்

கொழும்பு, ஜன. 18

வன்னிப் பகுதிக்கு எதிர் வரும் 20 ஆம் திகதி முதல் நாளாந்தம் 50 லொறிகளில் உணவுப் பொருள்கள் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாம்.

வன்னிப் பகுதிக்கான நிவாரணப் பணிகளின் இணைப்பாளரும், வவுனியா அரச அதிபருமான திரு. கே. கணேஷ் இத்தகவலை தெரிவித்தார்.

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னிப்பகுதியில் தங்கியுள்ள மக்களுக்குத் தேவையான உணவு, மருந்துப் பொருள்கள் மற்றும் மண்எண்ணெய் அனுப்பும் பணியை அரசு பெறுப்பேற்றுள்ளதாகவும் —

இதுவரை காலமும் நாளாந்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## சுப்பசொனிக், ஷெல் தாக்குதல்களால் வாகரையில் 8 அப்பாவிகள் காயம்

சாவகச்சேரி, ஜன. 18

மட்டக்களப்பில் வாகரைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் மக்கள் வாழ்விடங்கள் மீது 'சுப்பசொனிக்' விமானங்கள் கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டன. இராணுவத்தினர் அப் பகுதிகளை நோக்கி அகோர ஷெல் தாக்குதல்களையும் நடத்தினர்.

இத் தாக்குதல்களில் 4 பெண்கள் உட்பட 8 அப்பாவி மக்கள் காயமடைந்தனர்; மக்களின் வீடுகள், சொத்துக்கள் நாசமாகின.

நேற்று முன்தினம் காலை 5.30 மணியளில் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் ஐந்து அப்பாவிகள் காயமடைந்தனர்.

நண்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற சுப்பசொனிக் தாக்குதலில் 3 அப்பாவிகள் காயமடைந்தனர்; சில வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன. (உ-3)

## பஸ்கள் மூலம் 4 ஆயிரம் துருப்புக்கள் நகர்வு

# மட்டக்களப்பில் ஓரிரு தினங்களில் ராணுவ நடவடிக்கை ஆரம்பமாகும்?

### 4 பிரதேச செயலர் பிரிவுகளில் நடத்தப்படலாம்

கொழும்பு, ஜன. 18

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஓரிரு தினங்களில் சமகாலத்தில் தாக்குதல் நடவடிக்கையை மேற்கொள்ள படையினர் தயாராகி வருவதாககொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வவுணதீவு, வாகரை, பட்டிப்பளை, போரதீவுப்பற்று ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலேயே தாக்குதல் நடவடிக்கைக்கான முஸ்தீபு மேற்கொள்ளப் படுவதாக தெரிவிக்கப்பட்ட.து.

இந்த தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபடுத்த கூடுதலாக 4 ஆயிரம் படையினர் தென்னிலங்கையில் இருந்து பஸ்கள் மூலம் கிழக்குக்கு கொண்டு வரப்படுவதாகவும் அப்பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

(உ-3)

## தமிழர் வீடு தீக்கிரை

சாவகச்சேரி, ஜன. 18

கொழும்பில் உள்ள சீதுவை கணபுல பகுதியில் தமிழர் வாழ்ந்து வந்த வீடு ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

வீட்டில் இருந்த தமிழ் குடும்பம் வெளியே சென்ற சமயம் நடந்த இந்த சம்பவத்தால் அந்த வீட்டுக்காரருக்கு ஏற்பட்ட நஷ்டம் சுமார் 5 லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. (உ-3)

## படகுச் சேவை இன்று இல்லை

சாவகச்சேரி, ஜன. 18

தவிர்க்க முடியாத காரணங்களால் கிளாலி—பூநகரி படகுச் சேவை இன்று நடைபெறாது என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்

(உ)

## ராணுவ அதிகாரி திருமலையில் சுட்டுக்கொலை

சாவகச்சேரி, ஜன. 18

திருகோணமலை நகருக்குள் இராணுவ அதிகாரி ஒருவரை விடுதலைப்புலிகள் சுட்டுக் கொன்றிருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்திருப்பதாக 'புலிகளின் குரல்' [illegible]

## 2 ஏ.எஸ்.பிமார், 32 கான்ஸ்டபிள்கள்

# கடமைக்கு யாழ்.வர மறுத்த பொலீஸார் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜன 18

யாழ்ப்பாணத்திற்கு இடம் மாற்றம் செய்யப்பட்ட இரு உதவிப் பொலீஸ் அத்தியட்சகர்களும் (ஏ. எஸ். பிமார்), 32 பொலீஸாரும் கடமைக்குச் சமுகம் தரவில்லை. இதனையடுத்து அவர்கள் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

வடபிரதேச பொலீஸ் மா அதிபர் சிறிசேன ஹேரத் இத்தகவலை வெளியிட்டிருப்பதாக ''திவயின'' சிங்கள நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

காங்கேசன்துறையில் பொலீஸ் பயிற்சிக் கல்லூரி ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (உ-10)

# தீர்வுத் திட்டம் குறித்து சகல கட்சிகளுடனும் பேச்சு!

### அரசதரப்பில் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 18

அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தின் சட்ட வரைவு குறித்து அனைத்துக் கட்சிகளுடனும் அரசு கலந்துரையாடி அவற்றின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும்.

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் நேற்று இத்தகவலை வெளியிட்டார்.

நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்ட பின்னர், எதிர்வரும் 9 ஆம் திகதி மீண்டும் நாடாளுமன்றம் கூடும். அப்போது சட்ட வரைவு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன் வைக்கப்படும்.

அதற்கு முன்னர் பல்வேறு கட்சிகளுடனும் சட்ட வரைவு குறித்து அரசு கலந்துரையாடி, நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்பாக சட்ட வரைவு வரும்போது இணக்கம் ஏற்படக் கூடியதான ஒரு சூழ்நிலையை அரசு உருவாக்கும்.

சட்டவரைவை நாடாளு

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்முடன் இணங்கிப்போகாத

# வடமேல் மாகாணத்தின் ஆளுநரிடம் விளக்கம் கோருகின்றார் சந்திரிகா!

கொழும்பு, ஜன. 18

தம்முடன் இணங்கிப் போகாத வடமேல்மாகாண சபை ஆளுநரிடம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விளக்கம் கோரியிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

★ தம்முடன் ஆலோசனை கலக்காமல் — மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு மேலதிக உறுப்பினர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தமை —

★ மாகாண வரவு — செலவுத் திட்டத்தில் ஒப்பமிடும் விடயத்தில் அரசமைப்பு ஏற்பாடுகளைப் பின்பற்றாமை—

ஆகிய இரு விடயங்கள் குறித்தே ஜனாதிபதி வடமேல் மாகாண சபை ஆளுநரிடம் விளக்கம் கோரியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவை குறித்து விளக்கமான அறிக்கைகளை உடன் தமக்குச் சமர்ப்பிக்கும்படியும் சம்பந்தப்பட்ட ஆளுநருக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பணிப்புரை விடுத்திருக்கின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் இருக்கும் இந்த மாகாண சபையில் முதலமைச்சராக ஆர். எம். ஆர். நிமால் பண்டாரா பணிபுரிகின்றார்.

மாகாண சபையின் புதிய ஆண்டுக்கான வரவு — செலவுத் திட்டத்தில் ஒப்பமிட ஆரம்பத்தில் ஆளுநர் மறுத்ததும் —

இந்தச் சபையையும் கலைப்பதற்கு வசதியாகவே ஆளுநர் மூலம் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நடவடிக்கை எடுக்கின்றது என அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்பட்டதும் —

ஆனால் திடீரென வரவு— செலவுத் திட்டத்தில் ஆளுநர் கையொப்பமிட்டதை அடுத்து, அந்த மாகாணத்தில் ஐ. தே. க. ஆட்சியைக் கலைக்கும் முயற்சி புஸ்வாணமாகிப் போய்விட்டது என அவதானிகள் கருத்து வெளியிட்டதும் —

குறிப்பிடத்தக்கவையாகும். (உ)

## முகமாலையில் கசிப்பு உற்பத்தி; ஒருவர் கைது

தென்மராட்சி, ஜன. 18

முகமாலை இந்திரபுரத்தில் உள்ள தோட்டக் காணி ஒன்றில் கசிப்பு உற்பத்தி செய்து விற்ற கோண்டாவில் வாசி ஒருவர் பளை காவல் துறையினரிடம் பிடிபட்ட சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

காணியில் பயிற்றம் கொடி பயிருக்குள் மறைந்திருந்து கசிப்பு காய்ச்சி விற்பனை செய்தபோதே காவல்துறையினரிடம் இவர் மாட்டிக் கொண்டார். கசிப்பு உற்பத்தி செய்யப்பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும், கசிப்பும் கைப்பற்றப்பட்டன.

(இ-117)

## கலந்துரையாடல்

சாவகச்சேரி, ஜன. 18

மக்களின் இடம்பெயர்வு தொடர்பாக யாழ். அரச அதிபருக்கும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கும் யாழ். செயலகத்தில் நடைபெறும். (உ-7)

## கடத்தப்பட்டது

மன்னாரில் உள்ள அராசங்க திணைக்களம் ஒன்றுக்கு சொந்தமான வான் ஒன்று இனத்தெரியாதவர்களால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடத்திச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

(உ-3)

## சோதனை நடத்துவதாகக் கூறி

# தமிழர் வீடுகளில் கொள்ளை; ராணுவ சார்ஜன்ட் கைது!

## அவரின் கீழ் இயங்கிய குழு சிக்கியது

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் தமிழர் வீடுகளில் இராணுவ சீருடையில் நடத்தப்பட்ட கொள்ளைகள் தொடர்பாக இரு இராணுவத்தினர் தேடப்பட்டு வருகின்றனர்.

இக்கொள்ளைகள் தொடர்பாக ஏற்கனவே இராணுவ தலைமையகத்தின் சேமநலப் பிரிவில் பணியாற்றும் சார்ஜன்ட் ஒருவரும், தலைமறைவாகத் திரிந்த இராணுவச்சிப்பாய் உட்பட நால்வரும் கைதாகியிருந்தனர்.

இவர்களில் ஒருவர் சாரதி எனத் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இராணுவ சார்ஜன்ட் இக்கொள்ளைக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார் என பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாம்.

கொட்டாஞ்சேனை, வத்தளைப் பகுதிகளில் இடம்பெற்ற பல லட்ச ரூபா பெறுமதியான தங்க நகை, ரொக்கப் பணம் கொள்ளைகள் பற்றிய தகவல்கள் வெளிவந்துள்ளன எனவும் —

அப்பகுதியில் இடம்பெற்ற கொள்ளை அனைத்தும் இராணுவச் சீருடையில் சென்றோராலேயே மேற்கொள்ளப்பட்டன எனவும் —

பொலிசார் தெரிவிக்கின்றனர்.

கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் வீடுகளைச் சோதனையிடுவதாகக் கூறி இக்கோஷ்டியினர் கொட்டாஞ்சேனைப் பகுதியில் தமிழர்களின் நான்கு வீடுகளைக் கொள்ளையிட்டுள்ளனர்.

கொள்ளையிடப்பட்ட நகைகளில் ஒருபகுதி சந்தேக நபர்களின் வீடுகளில் ஒழித்து வைக்கப்பட்டிருந்தன; ஏனையை விற்கப்பட்டுள்ளன.

(உ-3-10)

## தற்கொலை

இலங்கை இராணுவத்தின் புஸ்ய 13 ஆவது பிரிவின் தலைமையகத்தில் புதிதாக இராணுவ பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை முகாமில் இருந்து தப்பிச் சென்று தற்கொலை செய்ததாக தெரிவிக்கப்பட்டது.

ரவீந்திர சஞ்ஜீவ பெரேரா என்பவரே தற்கொலை செய்தவராவார். (உ-3)

# வவுனியா முகாமில் பயணிகளுக்கு 'பாஸ்' வழங்குவதில் மீண்டும் கெடுபிடி

வவுனியா, ஜன. 18

வடக்கில் இருந்து தெற்கே செல்லுவோர் வவுனியாவில் தடுத்துவைக்கப்படும் வேப்பம்குளம் முகாம் —

ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள முகாம் — ஆகியவற்றில் பயணிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்த இரண்டு முகாம்களும் வடபகுதிப் பயணிகளால் நிரம்பி வழிகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

சில தினங்களாக இடைநிறுத்தி வைக்கப்பட்ட கிளாலி படகுச் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதே பயணிகள் எண்ணிக்கை அதிகரிக்கக் காரணம் என்று கூறப்படுகிறது.

வடபகுதியில் இருந்து வருவோரில் சுமார் 300பேர்வரை தற்போது தினமும் இந்த முகாம்களுக்கு அழைத்து வரப்படுகின்றனர்.

ஆனால் தினமும் 100 பேருக்கு மட்டுமே கொழும்பு செல்ல 'பாஸ்' வழங்கப்படுகிறது.

இந்த முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பயணிகளில் 45 வயதுக்கு உட்பட்ட பயணிகள், எங்கு சென்று யாருடன் தங்க உள்ளனரோ அவர்கள் வவுனியாவுக்கு நேரில் வந்து கூட்டிச் செல்ல வேண்டும் என்றும் —

45 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டினால் அனுமதி வழங்கப்படும் என்றும்—

50 வயதுக்கு மேற்பட்டோர் அனுமதி பெறத் தேவை இல்லை என்றும்— தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை கொழும்பில் வேலை செய்யும் கணவரிடம் செல்வதற்காக வடபகுதியில் இருந்து வந்த இளம் தாயார் ஒருவரையும் அவரது கைக் குழந்தை ஒன்றையும் கணவர் கொழும்பில் இருந்து வவுனியா வந்தும் கூட்டிச் செல்ல முடியவில்லை என்றும்—

அந்த இளம் மனைவியின் பெயர் அவர் கொழும்பில் தங்க உள்ள வீட்டில் பதிவு செய்யப்படவில்லை என்ற காரணம் காட்டியே அவரின் அனுமதி மறுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ)

## களஞ்சியம் அமைப்பதற்கு ஐ. நா. தூதரகம் உதவும்

கப்பலிலிருந்து இறக்கப்படும்உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை சேமித்து வைக்க பொருத்தமான தற்காலிக களஞ்சியம் ஒன்றை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் அமைத்துக்கொடுக்கும்.

இது தொடர்பாக யாழ். அரச அதிபருக்கும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகப் பிரதிநிதிக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

மூவாயிரம் மெற்றிக் தொன் பொருள்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு பொருத்தமான களஞ்சியம் ஒன்றைஅமைப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் தெரிவித்தார்.

(இ-7)

# தமிழர்களின் வாக்குகளைத் திரட்ட கட்சிகள் இப்போதிருந்தே மும்முரம்

கொழும்பு, ஜன. 18

மாகாண சபைத் தேர்தல்கள், திடீர்ப் பொதுத்தேர்தல் ஆகியவற்றை முன்னிட்டு — தமிழர்களின் வாக்குகளைத் தமதாக்கிக் கொள்வதற்கு எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும், ஆளுங் கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் இப்போதே செயலாற்றத் தொடங்கியுள்ளன.

மிசக் குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சி இது விடயத்தில் அதீத அக்கறை காட்டி வருகிறது.

நீண்ட காலமாக தென்னிலங்கை வாழ் தமிழர்கள் ஐக்கிய தேசியக் கட்சியையே ஆதரித்து வந்தனர். ஆனால் கடந்த பொதுத் தேர்தலிலும், ஜனாதிபதித் தேர்தலிலும் ஒன்றுமில்லாதவாறு பொ. ம முன்னணிக்கு வாக்களித்தார்கள்.

இது சம்பந்தமாக ஆராய்வதற்காக ஐ. தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா குழு ஒன்றை நியமித்திருந்தார். அந்தக் குழு தனது அறிக்கையை அண்மையில் சமர்ப்பித்திருந்தது

ஐக்கிய தேசியக் கட்சி சிங்களவர்களுக்கு மட்டுமே சார்பான கட்சி என்ற கருத்தை மாற்றுவதற்கு கட்சி உறுப்பினர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கான சிபார்சுகள் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் தத்தம் சபையிலும் அதற்கு வெளியேயும் உரையாற்றும்போது இனவாதம் பேசக்கூடாது என்பது அந்தச் சிபார்சுகளில் முக்கியமானதாகும்.

பிரஸ்தாப அறிக்கையில் கூறப்பட்ட ஏனைய சிபார்சுகளுக்கு ஏற்ப கிழக்கில் இடம் பெயர்ந்த தமிழ் மக்களின் நலன்களைக் கவனிப்பதில் ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் இப்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இதே வேளை தென்னிலங்கை வாழ் தமிழர்களின் ஆதரவை இழக்காமல் தக்க வைத்துக் கொள்வதில் ஆளும் கட்சியும் கவனமாக உள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

(உ)

## தேசியகல்வி நிறுவக மாணவருக்கு

தேசிய கல்வி நிறுவக பயிற்சி நெறி பயிலுகின்ற 1 ஆம், 2 ஆம் வருட மாணவர்கள் மற்றும், விரிவுரையாளர்கள் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் சமுகமளிக்கும் படி சிரேஷ்ட விரிவுரையாளர்களால் கோரப்பட்டுள்ளது. (இ)

## பணப்பையுடன் விடப்பட்ட புதிய சைக்கிள் திருட்டு

### காவல்துறையினர் மீட்டனர்

பளை நகர்ப் பகுதி கடை ஒன்றின் முன் பணம் வைக்கப்பட்ட பையுடன் விடப்பட்ட புதிய சைக்கிள் ஒன்று இனம் தெரியாதோரால் திருடப்பட்ட சம்பவம் சமீபத்தில் இடம்பெற்றது.

பணப் பையில் 2 ஆயிரத்து 50 ரூபா இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சைக்கிள் உரிமையாளரான வை. தியாகராசா என்பவர் செய்த முறைப்பாட்டை அடுத்து காவல் துறையினர் தீவிர தேடுதல் நடத்தி அன்றைய தினம் மாலையே சைக்கிளை மீட்டனர்.

இத் திருட்டுத் தொடர்பாக இருவரை சந்தேகத்தின் பேரில் அவர்கள் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (இ-101)


## அறிவித்தல்

**பிறேமன் தோமஸ்** [PREMAN, THOMAS]

தற்போதைய வசிப்பிடத்தை கீழ்க்காணும் விலாசத்துக்கு அறிவிக்குமபடி அவரின் தகப்பனார் கேட்கிறார்.

**ரெனி மூக்குக் கண்ணாடி அகம்**

[யோகா மருந்தகத்துக்கு உள்ளே]

சாவகச்சேரி. (40082)



## கணக்காய்வு நிறுவனம்

சோமேஸ்வரன், ஜே.எம். இராஜநாயகம் அன் கோ.

எக்கவுண்டிங் சிஸ்ரம் அன் சேவிர்ஸஸ்

(யாழ்.) லிமிட்டெட்.

இரட்ணம் அன் கோ.

இல. 140, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த எமது ஸ்தாபனம் தற்போது பின்வரும் முகவரியில் இயங்குகின்றது.

திரு. கே. சுப்பிரமணியம்,
''பத்மபதி'',
கச்சாய் வீதி, கொடிகாமம்.

வாடிக்கையாளர்கள் காலை 9-00 தொடக்கம் பிற்பகல் 2-00 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

நிர்வாகம்

(39973)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடப்பெயர்வு தற்காலிகமானதே; நாம் தோற்றுப் போய் விடவில்லை

## கிளிநொச்சிக் கூட்டத்தில் பொன் தியாகம்

கிளிநொச்சி, ஜன. 18
தற்போது யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்திருக்கிறோமே தவிர எமது விடுதலைப் போராட்டத்தில் நாம் தோற்றுவிடவில்லை. இந்த இடம்பெயர்வு கூட தற்காலிகமானதே.

இந்திய வல்லாதிக்கத்தின் சதியால் வங்கக் கடலில் காவியமான தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் நினைவாக கிளிநொச்சி பழைய பஸ் நிலையத்தில் நடந்த கூட்டத்தில் உரையாற்றிய தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு பொன் தியாகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசியதாவது:-

இன்று நாம் யாழ்ப்பாணத்தை இழந்துவிட்டோம். உலக போராட்ட வரலாறுகளில் இவ் வகையான இழப்புகள் தவிர்க்க முடியாதவை. இவை தற்காலிகமானவை.

தற்போது நாம் இடம்பெயர்ந்திருந்தாலும் மீண்டும் நாளை அங்கு செல்வோம்.

அரசு பிரசாரம் செய்வது போன்று புலிகள் அங்கு அழிந்துவிடவில்லை. இப்பொழுதும் நாம் களத்தில் நிற்கிறோம். பலத்துடனேயே நிற்கிறோம்.

நீதியானதும், நியாயமானதும், தர்மமானதும், ஒழுக்கம் நிறைந்ததுமான ஒரு தலைமையின் வழிகாட்டல் எமக்கு இருக்கிறது.

எமது தலைவர் தீர்க்கதரிசனம் மிக்கவர்.

அவரின் தீர்க்க தரிசனமான வேண்டுகோளை ஏற்று யாழ்ப்பாண மக்கள் ஒரு குறுகிய காலத்தில் வெளியேறினார்கள்.

எமது தேசியத் தலைவரின் மீது அசையாத நம்பிக்கை அவர்களுக்கு உள்ளதையே இது காட்டி நிற்கிறது.

எமக்கு ஒரு நாடு வேண்டும். நாம் அங்கு ஆட்சி அமைக்க வேண்டும்; எமக்கு பூரண சுதந்திரம் வேண்டும். அப்போது தான் இந்த இடம்பெயர்வுகளை நிரந்தரமாக இல்லாமல் செய்ய முடியும்.

ஒவ்வொரு போராளியும் மாவீரராகச் சரியும்போதும் நாம் துடி துடிக்கிறோம். துவண்டு போகிறோம். மீண்டும் நிமிர்ந்து நிற்கிறோம். அவர்கள் விட்டுச் சென்ற தூய இலட்சியப் பாதையில் எழுந்து நடக்கிறோம். அவர்களின் உந்துசக்தி எம்மை வழி நடத்துகிறது.

இப்படி அவர் கூறினார்.

(இ-7-9-ரி)

# யாழ். நகரைக் கைப்பற்றியதில் அரசின் நோக்கம் ஈடேறவில்லை

## சாவகச்சேரிக் கூட்டத்தில இளம்பரிதி உரை

அரசு பெரும் எடுப்பில் பல ஆயிரக்கணக்கான படையினரையும் அனைத்து ஆயுத பலத்தையும் பயன்படுத்தி வலிகாமம்மீது மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை குறித்து இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் ''இந்தப் படைபலத்தைக் கொண்டு யாழ்ப்பாணத்தை 10 நாட்களுக்குள் பிடித்திருக்கலாம்'' எனத் தெரிவித்திருந்தார். ஆனால் பல பேரிழப்புகளைச் சந்தித்த பின்னர் 52 நாட்களுக்குப் பின்னரே இராணுவத்தால் யாழ். நகரைக் கைப்பற்ற முடிந்தது. இந்த நடவடிக்கையால் அரசு இராணுவ, அரசியல், பொருளாதார ரீதியில் படுதோல்வியைச் சந்தித்துள்ளது.

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற மூத்த தளபதி கிட்டு உட்பட 10 வேங்கைகளின 3ஆம் ஆண்டு நினைவுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அரசியற்துறையைச் சேர்ந்த இளம்பரிதி இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

எமது போராட்டத்தை அழித்து எம்மை நசுக்கவென இந்தியப்படையினர் இங்கு வந்தனர்.

எமது தலைவர் வல்லமையைக் கொண்டும் மனவுறுதியைக் கொண்டும் இந்தியப் படையைத் தோல்வியுறச் செய்தார்.

மூன்று பேருடன் ஆரம்பித்த எமது போராட்டம் படையினரை முகாம்களில் முடக்குமளவிற்கு படிப்படியாக வளர்ந்துள்ளது.

எமது படைபலம் இன்னும் பெருகும். அப்போது ஆக்கிரமித்துள்ள நாற்பதினாயிரம் படையினரும் மீளமுடியாது.

நாம் அவர்களுக்கு சமாதி கட்டுவோமேயானால் படையினரால் வடக்கிலோ கிழக்கிலோ நகரமுடியாது.

வடக்கும் கிழக்கும் வெளிக்கும். அப்போது எமது மண்ணும் விடியும்.

இப்படி அவர் கூறினார்.

(இ-10-31)

# வலிகாமத்தில் மீண்டும் புலிக்கொடி ஏறும்வரை தமிழன் உறங்கக்கூடாது

## திருவில் கூட்டத்தில் வாஞ்சி உரை

வடமராட்சி, ஜன. 18
சர்வதேசக் கடல் பரப்பில் வீரகாவியமான இம் மாவீரர்களின் விழாவை அடுத்த ஆண்டு நாம் வலிகாமத்தில் நடத்தவேண்டும். இந்த வீர சபதத்தை ஒவ்வொருவரும் மனதில் கொள்ளவேண்டும். வலிகாமத்தில் புலிக்கொடி ஏறும் வரை தமிழன் உறங்கக் கூடாது.

திருவில் சதுக்கத்தில் நடைபெற்ற கேணல் கிட்டு உட்பட பத்து வீரவேங்கைகளின் நினைவு தினக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் கடற் புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

வாஞ்சிநாதன் மேலும் கூறியதாவது:-

கிட்டு வீரமரணமடைந்ததை நம்பமுடியாமல் இருக்கிறது. யாழ். மாவட்டம், இன்று ஒரு பகுதியை இழந்து நிற்கிறது. யாழ். மாவட்டம் என்றால் கேணல் கிட்டு என்று சொல்லலாம். அந்த அளவுக்கு யாழ். மாவட்டம் கிட்டுவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது.

### ராணுவத்தை முகாம்களுக்குள் அடக்கியவர்

1984 இல் யாழ். மாவட்டத்தில் இராணுவம் மக்களை அழிக்க வந்தபோது, தலைவரின் போர் வாளாக இருந்து, 1985 இல் இராணுவத்தை முகாமகளுக்குள் அடக்கி, யாழ். மாவட்டத்தை புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தவர் கேணல் கிட்டு. இது வரலாற்று உண்மை.

தளபதி கிட்டு விட்டுச் சென்ற மண்ணில் பத்து வருடங்கள் கழித்து இன்று ஒரு கண்ணை இழந்து நிற்கிறோம். வீரன் எப்போதும் வீழ்வதில்லை. ஒரு முறை வீழ்ந்தால் நிச்சயம் எழுந்து நிற்பான். அதேபோல நிலம் வீழ்ந்தாலும் ஒருநாள் எழுந்து தான் நிற்கப்போகிறது.

நாம் பிறந்த மண்ணில் பாடசாலைகள், மாந்தோப்புகள், தென்னை பனை மரங்கள் எல்லாம் இன்று ஏங்கிக் கிடக்கின்றன.

இம்மண்ணை மீட்காது விட்டால் கிட்டுவுக்கும் தோழர்களுக்கும் செய்தது துரோகமாக முடியும்.

வலிகாமத்தைச் சுடுகாடு போல் பிடித்துக் கொண்டு ஓநாய்கள் இருக்கின்றன. 5 லட்சம் மக்கள் அங்கு இருந்திருந்தால் ஒரு லட்சம் மக்கள் அழிந்திருப்பார்கள்.

நெஞ்சம் நிறைந்த இந்நாளில் மண்ணின் போர் வாளாக இருந்த வீரனின் நினைவை சிறப்பாகக்கொண்டாட முடியாத போதிலும், அவரது வீர சாதனைகளை— மறக்கமுடியாது. வரலாறுகளை— அடுத்த மாவீரர் நாளில் இந்நினைவை சிறப்பாகக் கொண்டாட வேண்டும்.

இழந்துபோன எம்மண்ணை மீட்காமல் எமக்கு வாழ்வு இல்லை.

எமது இருதயம் அன்னை பூமியில் உள்ளது. தலைவரின் ஆணையை ஏற்று ஆயிரம் ஆயிரமாக புலிகளில் இணைந்தால் வெற்றி நிச்சயம். எமது இளைஞர்களும், யுவதிகளும் இன்று விழித்து விட்டார்கள். துடித்து எழ வேண்டும்.

வலிகாமத்தில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், சிங்களவர் ஆகியோரின் கொடிகள் முன்னர் ஏற்றப்பட்டன.

மீண்டும் புலிக்கொடி அங்கு ஏற்றப்பட்டது.

தற்போது சிங்கக்கொடி ஏற்றப்பட்டாலும் மீண்டும் புலிக்கொடி ஏறும்.

அங்கு புலிக்கொடி ஏறும் வரை தமிழன் உறங்கக் கூடாது.

இப்படி அவர் கூறினார்.

(இ-13-118)

சிறுபான்மையினரைக் குறிக்கும்

# கோடுகள் அகற்றிய தனிச் சிங்கக்கொடி!

## நாளை கண்டியில் ஏற்றப்படும்

கொழும்பு ஜன். 18
இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஸ்ரீ லங்கா அரசு சமர்ப்பித்துள்ள அரசியல் யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், நாளை கண்டியில் நடைபெறும் சத்தியாக்கிரகத்தின் போது சிறுபான்மை மக்களைக் குறிக்கும் கோடுகளை நீக்கிவிட்டு தனிச்சிங்கம் கொண்ட கொடியேற்றப்படவிருக்கிறது.

பலம் வாய்ந்த ஒன்பது பிக்குகள் சங்கங்கள் இந்த சத்தியாக்கிரகத்துக்கு ஏற்பாடு செய்திருப்பது தெரிந்ததே.

ஸ்ரீலங்கா சிங்களவர்களுக்கே சொந்தம் என்று சிங்கள தீவிரவாதிகளால் அடிக்கடி கூறப்பட்டு வந்தாலும், கோடுகள் அகற்றப்பட்ட சிங்கக் கொடி ஏற்றப்படுவது அதன் உச்சக்கட்டம் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-10)

# வடமராட்சியிலிருந்து தென்மராட்சிக்கு மீன்

வடமராட்சியில் இருந்து தென்மராட்சிப் பகுதி சந்தைகளுக்கு ஆழ்கடல் மீன் விற்பனைக்காகக் கொண்டு வரப்படுகிறது.

வடமராட்சி கிழக்கு கடல் பகுதியில் படையினரின் நடமாட்டம் இல்லாத வேளையில், இப்பகுதி மீனவர்கள் ஆழ்கடலில் தமது தொழில்களைச் மேற்கொள்கின்றனர்.

ஆழ்கடல் மீன் சந்தைகளுக்கு வரத் தொடங்கியுள்ளதால் மீன் விலை விரைவில் வீழ்ச்சியடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-117)

# செப்ரிசீமியா நோயினால் மரணங்கள் அதிகரிப்பு

மந்திகை, ஜன, 18
செப்ரிசீமியாவின் தாக்கம் மீண்டும் அதிகரித்திருப்பது வைத்தியசாலைப் பதிவேடுகளில் இருந்து தெரியவருகிறது.

செப்ரிசீமியாவின் தாக்கத்துக்குள்ளாகி மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தவர்களில் நேற்று முன்தினமும் ஒருவர் மரணமானார்.

தெல்லிப்பளையில் இருந்து இடம் பெயர்ந்து பருத்தித்துறை புற்றளைப் பாடசாலை முகாமில் தங்கியிருந்தவரான வேலன் தம்பிராசா (வயது 47) என்பவரே மரணமானவராவார்.

இதற்கு முதல் நாளும் ஒருவர் மரணமாகி இருந்தார். நீண்ட நாள் வயிற்றோட்ட நோயினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும்போது செப்ரிசீமியாவின் தாக்கத்திற்குள்ளாகி இவர் இறந்தார்.

வல்வெட்டியைச் சேர்ந்த சரவணைக்குட்டி யோகநாதன் (வயது 24) என்பவரே இறந்தவர் ஆவார்.

இவர்களுடன் கடந்த 16 நாள்களில் எட்டுப்பேர் செப்ரிசீமியாவினால் உயிரிழந்துள்ளது வைத்தியசாலைகளின் பதிவேடுகளின் படி தெரிய வந்துள்ளது. (இ-15-173)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**18 — 01 — 1996**

**இரவு**

★ 8-02 — கேணல் கிட்டு அவர்களின் 3ஆம் ஆண்டு நினைவாக நடைபெற்ற நிகழ்ச்சிகளின் தொகுப்பு.
★ 8. 30 — செய்திகள்.
★ 8. 40 — அறிவிப்புகள் தொடர்ந்து 9. 00 மணி வரை தாயகப்பாடல்கள்

**19 — 01 — 1996**

**காலை**

★ 7. 02 — மாவீரவணக்கம்
★ 7-10 — உதயகீதங்கள்
★ 7. 30 — செய்திகள்
★ 7. 35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-45 — அறிவிப்புகள் — தொடர்ந்து 8. 00 மணி வரை புரட்சிக்கீதங்கள்.

இடம்பெயர்ந்தோருக்கு

# விரும்பியவாறு உணவு வழங்க நடவடிக்கை

சாவகச்சேரி, ஜன. 18
வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் தங்கியுள்ளவர்களுக்கு அவர்களின் விருப்பப்படி சமைத்த உணவையோ அல்லது உலர் உணவையோ வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ளவர்களில் தாமாக சமைத்து உண்ண விரும்பவர்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படும் என்றும்—

சமைத்த உணவைப் பெற விரும்புபவர்கள் ஓரிடமாக்கப்பட்டு அவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்படும் என்றும்— அவர் மேலும் தெரிவித்தார்.

முகாம்களில் உள்ளோருக்கு சமைத்த உணவு வழங்க அனுமதி தரும்படி யாழ். அரச அதிபர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்திடம் கேட்டிருப்பது தெரிந்ததே. (இ-7)

## சோப் விலை வீழ்ச்சி

தென்மராட்சி, ஜன. 18
சாவகச்சேரி சந்தையில் சோப் வகைகளின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

நேற்று லக்ஸ்சோப், சன்லைட் சோப் ஆகியவை தலா 20 முதல் 25 ரூபா வரை விற்கப்பட்டன. (இ-117)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## மணப்பெண் தேவை

பிரான்சில் வதியும் 33 வயது, மகம் முதலாம் பாகம், வடமராட்சியைச் சேர்ந்தவருக்கு நல்ல நிறமும், அழகும் உள்ள நற்குடியில் பிறந்த மணப்பெண் தேவை. செவ்வாய்க் குற்றம் இல்லை, கிரகபாவம் நாலு, இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். இல. 101, மே/பா உதயன், பருத்தித்துறை. (40080)

## வாடகைக்கு தேவை

ஆசிரியைக்கு வடமராட்சியில் / தென்மராட்சியில் வீடு அல்லது அறை வாடகைக்கு தேவை. கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல. 518, மே/பா உதயன். சரசாலை தெற்கு. (40190)

## ஆங்கிலம் 96

B.Sc. Inter London அனுபவமுள்ள ஆசிரியர் பேச, எழுத குறுகிய காலத்தில் பிரத்தியேகமாக உங்கள் வீட்டில் கற்பிப்பார். தொடர்பு: கடித மூலம். மெடி எயிட்ஸ் மருந்தகம், கண்டி வீதி, சாவகச்சேரி. (40193)

## போட்டோ பிரதிகள்

தெளிவான போட்டோ பிரதிகளை பெற்றுக்கொள்வதற்கும், அடையாள அட்டைகளை கவரிட்டுக்கொள்வதற்கும் நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம் கிளீன்கட், சாவகச்சேரி நீதிமன்றம் அருகில். (39935)

## வீடு தேவை

பருத்தித்துறையில் வீடு வாடகைக்குத் தேவை. வாடகை முற்பணம் கொடுக்கப்படும். தொடர்புகொள்ளவும். சிவகுமரன் பிடவை மாளிகை, பருத்தித்துறை. (70081)

# மருத்துவ தாதியர் பரீட்சை

சாவகச்சேரி, ஜன. 18

மருந்துவ தாதியர் பயிலுநர் போட்டிப் பரீட்சை எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

சாவகச்சேரி மகளிர், சாவகச்சேரி இந்து, வட இந்து மகளிர் ஆகிய பாடசாலைகளில் இப்பரீட்சை நடைபெறவிருப்பதாக பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் அமையும் நிலையத்தில், யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து சென்றுள்ளவர்கள் தோற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் தெரிவித்தார். (இ 3)

# ஆசிரியர்கள் கொழும்பில் பதிவு

கொழும்பு, ஜன. 18

யாழ். குடா நாட்டில் இருந்து இடம்பெயர்ந்த பெரும் எண்ணிக்கையான ஆசிரியர்கள் கொழும்பில் உள்ள வடக்கு—கிழக்கு ஆளுநர் அலுவலகத்தில் தங்கள் பெயர்களைப் பதிந்துள்ளனர்

எனினும் இந்த ஆசிரியர்கள் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் பணியாற்ற மறுப்புத் தெரிவித்து வருகின்றனர் என்று கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது (இ-3)

# கரம்பகம் பகுதியில் 350 வீடுகள் அடுத்த 2 வாரங்களில் பூர்த்தியாகும்

சாவகச்சேரி, ஜன. 18

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பகுதி முகாம்களில் தங்கி உள்ளவர்களை குடியமர்த்துவதற்கான மிருசுவில் கரம்பகம் பகுதியில் அமைக்கப்படும் ஆயிரம் வீடுகளில் முதலில் 350 வீடுகளை அமைத்து முடிக்கும் பணி இன்னும் இருவாரங்களில் பூர்த்தியாக்கப்படும்.

இந்த 350 வீடுகளிலும் தென்மராட்சி பகுதியிலுள்ள 66 பாடசாலைகளில் தங்கியுள்ள 4 ஆயிரத்து 672 பேர் முன்னுரிமை அடிப்படையில் குடியமர்த்தப்படுவார்கள்.

இதேவேளை ஆயிரம் வீடுகள் அமைக்கும் வேலைகள் ஒரு மாத காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யப்படும் என்றும்—

அத்துடன் மேலும் ஆயிரம் வீடுகள் அடுத்துவரும் ஒரு மாத காலப்பகுதியில் அமைத்து முடிக்கப்படும் என்றும்—

இவை தென்மராட்சிப் பகுதிகளில் பரவலாக அமைக்கப்பட உள்ளதாகவும்—அரச அதிபர் தெரிவித்தார்.

ஒரே இடத்தில் வீடுகளை அமைப்பதனால் பொதுவான பாடசாலை மற்றும் வைத்தியசாலைகள் அமைக்க தேவை ஏற்படும் என்றும்—

எனவே இந்த வீடுகளை பரவலாக அமைப்பதன் மூலம் இவ்வாறான பிரச்சினைகளை தவிர்க்க முடியும் என்றும்— அவர் மேலும் சொன்னார்.

மேற்படி வீடுகளை அமைப்பதற்குத் தேவைப்படும் இடங்களை காணி விஸ்தரிப்பு அதிகாரி தலைமையிலான குழு நேரில் சென்று பார்வையிட்டு தெரிவு செய்து வருகிறது.

இதற்கிடையில் தாமாக தமக்கு விரும்பிய இடங்களில் வீடுகளை அமைக்க விரும்பும் இடம் பெயர்ந்தோர் யாழ். அரச அதிபருடன் தொடர்பு கொள்ளுமிடத்து அவர்களுக்கு வீடுகள் அமைப்பதற்கு தேவைப்படும் பொருள்களை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வண்டில் சில்லு ஏறி இளைஞன் படுகாயம்

வண்டில் ஏறியதில் ஒருவர் தலையில் காயம் அடைந்தார்.

வண்டிலை ஓட்ட முற்பட்ட வேளை மாடு அவசரயாக இழுத்ததை அடுத்து இவர் இடறி விழுந்தார் என்றும் இவரது தலைக்குமேலால் வண்டில் சில்லு ஏறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வரணியில் ஞாயிற்றுக்கிழமை னம் இடம்பெற்ற இந்த விபத்தில் நல்லூரில் இருந்து இடம் பெயர்ந்து சாவகச்சேரியில் வசிக்கும் இராமலிங்கம் கிருஷ்ண குமார் (வயது28) என்பவரே படுகாயமடைந்தவராவர்.

படுகாயமடைந்தவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் இருந்து மந்திகை ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# அமைச்சரவை மாற்றத்தை சந்திரிகா ஒத்திவைத்தார்

தமது அமைச்சரவையை மாற்றியமைக்கும் திட்டத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒத்திவைத்திருப்பதாக கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்று தகவல் வெளியிட்டிருக்கின்றது.

நாடாளுமன்றக் கூட்டத் தொடர் கடந்த வாரம் ஒத்திவைக்கப்பட்ட கையோடு அமைச்சரவை மாற்றம் வரும் என முன்னர் எதிர்பார்க்கப் பட்டிருந்தது.

ஆனால் வடமத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைகளைக் கலைக்கும் முடிவு திடீரென எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து—

அந்த மாகாணசபைகளுக்கான தேர்தல் முடிந்த பின்னர் அமைச்சரவை மாற்றத்தைக் கொண்டு வரலாம் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது மனதை மாற்றிக் கொண்டார்.

— இவ்வாறு கொழும்புச் செய்திகள் மேலும் தெரிவித்தன. (உ)


## அறிவித்தல்

1996 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் கார்மேல் முன் பள்ளிப் பாடசாலை மாணவர்களை அனுமதிக்க விண்ணப்பித்தவர்களுக்கு!

1. அவர்கள் செலுத்திய கட்டணத்தை மீளப்பெற கீழ்க்காணும் முகவரியில் சந்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
2. முன்பள்ளி ஆசிரியர்களைத் தங்கள் சம்பளத்தை பெற்றுச் செல்லவும் கேட்டுக் கொள்கின்றோம்.

இடம்:- திருக்குடும்ப கன்னியர் மடம், மிருசுவில்.

காலம்:- 22-1-96 மு.ப. 10 மணியிலிருந்து
24-1-96 ந.ப. 12 மணிவரை

தகவல் தருபவர்:
அருட்சகோ. செபஸ்ரி. அ. கா.
பொறுப்பாளர்,
யாழ். கார்மேல் முன்பள்ளி

(40079)

## அறிவித்தல்

ஹாட்லிக் கல்லூரி மாணவரின் கல்விசம்பந்தமான கலந்துரையாடலொன்று 21 - 01 - 1996 ஞாயிறு காலை 10.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

மாணவரின் பெற்றோர், ஆசிரியர், பழைய மாணவர் தவறாது கலந்து கொள்ள அழைக்கிறோம்.

நன்றி.

ஹாட்லிக் கல்லூரி
பழைய மாணவர் மன்றம்.

பருத்தித்துறை
18 - 01 - 96

(சி/3158)

## கண்ணீர் அஞ்சலி

மாங்குளம் இலங்கை மின்சார சபையில் கடமையாற்றியவரும், சுன்னாகம் கந்தரோடையைப் பிறப்பிடமாக கொண்டவரும் ஆகிய

### அமரர் திரு. த. சிறிதரதேவனின்

மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியையும் அவரின் பிரிவால் துயருறும் மனைவி, மகள், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மின் அத்தியட்சகர்களும்
ஊழியர்களும்

மாங்குளம், கிளிநொச்சிப் பிரிவுகள். (இ/3159)


# தமிழீழ மீட்பு நிதி வன்னியில் மீளளிப்பு

## இன்றும் நாளையும் பெறலாம்

கிளிநொச்சி, ஜன. 18

வலிகாமம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வன்னிப் பிரதேசத்தில் தங்கி உள்ளவர்களில் தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பதற்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் அவற்றை மீளப் பெறுவதற்கான இடமும் திகதியும் நிதித்துறையினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று வியாழக்கிழமை காலை 8-00மணி தொடக்கம் 9-30 வரை புளியங்குளம் ம. வி. இலும்—

காலை 8-30மணி தொடக்கம் 9-30 மணிவரை புதுக்குடியிருப்பு சுப்பிரமணிய வித்தியாலயத்திலும் —

முற்பகல் 10 மணிதொடக்கம் 12 மணி வரை மாங்குளம் ம. வி இலும் — முற்பகல் 10-30 மணி தொடக்கம் 12-30 மணிவரை ஒட்டுசுட்டான் ம. வி. இலும்—

பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 5மணிவரை மல்லாவி யோகபுரம் ம. வி. இலும் —

பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணிவரை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும் — மீட்புநிதிக் கடன் மீளளிப்புச் செய்யப்படும்.

### நாளை

நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் 10 மணிவரை முழங்காவில் அரசியல்துறைவட்டச் செயலகத்திலும் —

முற்பகல் 11மணி தொடக்கம் 12 மணிவரை ஆண்டான்குளம் ம. வி. இலும்—

பிற்பகல் 2 - 30 மணி தொடக்கம் 4 மணிவரை முருங்கன் கற்கடந்த குளம் றோ. க. த. க பாடசாலையிலும் — மீளளிப்புகள் வழங்கப்படும்.

இதேவேளை கடன் பத்திரங்களை தவறவிட்டவர்களுக்கான மீளளிப்புக்கள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## புலோலி

# மெதடிஸ்த பாடசாலையில் மேலும் வார்ட்டுகள்

பருத்தித்துறை, ஜன. 18

புலோலி மெதடிஸ்தமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலையில் பொது மருத்துவ சிகிச்சை, தொண்டை, காது, மூக்கு சிகிச்சை ஆகியவற்றுக்கான தனியான இரு வார்டுகள் கடந்த 15ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்பாடசாலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் கண்சிகிச்சை வார்ட் ஏற்கனவே இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

மந்திகையில் இயங்கும் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஏற்கனவே பொது மருத்துவ சிகிச்சைக்கான வார்ட் ஒன்று இயங்கி வருகின்ற போதிலும்; அங்கு ஏற்பட்டுள்ள இடநெருக்கடி மற்றும் கிளினிக் வசதிகள் என்பனவற்றைக் கருத்தில் கொண்டு புலோலி மெதடிஸ்தமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் மேலதிகமாக பொது மருத்துவ சிகிச்சைக்கான வார்ட் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நோயாளருக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்களைப் போக்குமுகமாக சுமார் ஒன்றரை லட்சம் ருபா செலவில் மின்சார வசதி, குழாய்நீர் வசதி என்பன போதனா வைத்தியசாலை பணிப்பாளர் செல்வி ந. கனகரத்தினத்தின் மேற்பார்வையில் இங்கு மேற்கொள்ளப்பட்டிடுக்கிறது.

(இ-15-118-173)

# படையினரைப் பார்க்கச் சென்ற நால்வர் கைது

கொழும்பில் மருத்துவமனையில் காயமடைந்த இராணுவத்தினரை பார்வையிடச் சென்ற 2 சிங்கள யுவதிகளும், இரு தமிழர்களும் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கோட்டையில் உள்ள இராணுவ மருத்துவமனையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தாம் தமது குடும்ப நண்பரை பார்க்கச் சென்றதாக கைதானவர்கள் கூறினார்கள்.

கைதான இரு தமிழர்களும் பதுளையில் பணியாற்றும் மலையக இளைஞர்கள் ஆவர். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கவ்வைக்கும் உதவாது!

சந்திரிகா அரசு, பெரும் சிரமப்பட்டு, இனப்பிரச்சினைக்கான தனது அரசியல் தீர்வு யோசனையை உத்தியோகபூர்வமாக வெளியிட்டிருக்கிறது.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் மூன்றாம் திகதி சந்திரிகா அறிவித்த யோசனையில் இருந்த தமிழர்களுக்குச் சற்றுச் சாதகமான அம்சங்களைக் கூட, இப்போதைய சட்ட வரைவில் காண முடியவில்லை!

அவற்றுக்குச் சிங்கள பௌத்த பேரினவாதத்திடம் இருந்து கிடைத்த எதிர்ப்பைத் தொடர்ந்து, அந்த அம்சங்களைச் சர்ச்சைக்கு உரியனவாகக் கருதி, நாடாளுமன்றத் தெரிவுக் குழு தீர்மானிக்க வேண்டிய விடயங்களாக்கி விட்டது அரசு. மிகுந்த ''கெட்டித்தனம்'' பார்த்தீர்களா!

வடக்கு -கிழக்கு இணைப்பு உத்தேச பிராந்திய சபைகளின் எல்லை விவரம், வெளிநாட்டு உதவியை நேரடியாகப் பெறுதல் போன்ற அம்சங்கள் குறித்து முடிவு எடுக்கும் பொறுப்பை தெரிவுக் குழுவிடமே அரசு விட்டுவிட்டது!

அதேவேளை, பிராந்திய சபைகளை ஆளுநர்களும், ஜனாதிபதியும் கலைத்துவிடும் அதிகாரம் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது; முந்திய நிலைப்பாடு மாற்றப்பட்டுள்ளது.

அதேபோல பிராந்திய சபைகளுக்கு உட்பட்ட காணிகளை மத்திய அரசு தனக்குச் சுவீகரித்துக் கொள்ளும் அதிகாரமும் புதிதாக சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஐக்கிய இலங்கைக்குள் உட்பட்ட அதிகாரப் பரவல் அலகுகளாகவே பிராந்திய சபைகள் அமைகின்றன. சமஷ்டி — கூட்டாட்சி — என்ற வாடை தூரத்தேயும் வீசவில்லை! சுயாட்சிகுறித்து ஓர் எழுத்துத் தானும் இல்லை!

தமிழர்களின் இரு முக்கிய அபிலாசைகளான தாயகம் பேணும் உரிமையும், தன்னாட்சி உரிமையும் ஒரு மில்லிகிராம் கூட— மருந்துக்குத் தானும்— இல்லாத தீர்வுத் திட்டம் இதுவாகும்.

இதனைத் தன்மானம் உள்ள தமிழன் எவனும் ஏறெடுத்தும் பார்க்கமாட்டான். இத்தனை அழிவுகள், இழப்புகள், இன்னல்கள், அவலங்கள், தியாகங்களின் பின்னரும் இத்தகைய ஒரு செத்தல் திட்டத்தைத்தான் சிங்கள அரசினால் தமிழருக்குத் தரமுடியும் என்று சிங்கள அரசு எடுத்துக்காட்டியிருக்கிறது!

தமிழர்களின் பிரதான அரசியல் அபிலாசைகளை ஓரளவுக்கேனும் கவனத்தில் எடுக்கும் நிலையில் சிங்களவர்கள் இல்லை. தங்களுக்குச் சார்பான ஒரு தீர்வைத் தமிழர் மீது திணிப்பதே அவர்களின் நோக்கமாக உள்ளது என்பதனை, டி. எஸ்., பண்டாரநாயக்கா, ஜே. ஆர். போன்றே சந்திரிகாவும் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

தமிழர்களுக்கு ''கவ்வைக்கும் உதவாத'' இந்தத் தீர்வுத் திட்டம் குறித்து அவர்கள் அக்கறைப்படப்போவதில்லை என்ற செய்தியை சந்திரிகாவுக்கு இத்தால் தெரிவிக்கலாம். இதனை நிறைவேற்றுவதற்கு அவர் தமது சக்தியை விரயமாக்குவது வீண் என்பதனையும் பாவம் அவருக்குச் சொல்லி வைக்கலாம்.

# 100 ஆண்டுகளின் பின் கொடிய வரட்சி!

கொழும்பு, ஜன. 18

தற்போது நிலவும் காலநிலை வேறுபாடுகளை மிக நுணுக்கமாக அவதானிக்கும்போது நூறு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்படும் கொடிய வரட்சி இவ்வாண்டு ஏற்படக்கூடிய அறிகுறிகள் தென்படுவதாக சமூக விஞ்ஞானியும் முன்னாள் விவசாயப் பணிப்பாளருமான கலாநிதிடி. ஆர். பானபொக்க தெரிவித்துள்ளதாக ''சிலுமின'' வார இதழ் தெரிவிக்கிறது.

1879 ஆம் ஆண்டில் அதாவது இற்றைக்கு 116 ஆண்டுக்கு முன்னர் இலங்கையில் கொடிய வரட்சி நிலவியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான பேரழிவை ஏற்படுத்தும் கொடிய வரட்சி நூறு ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் ஏற்படும் என கர்ணபரம்பரையாகக் கூறப்பட்டு வருகிறதாம்.

எவ்வாறாயினும் கடந்த வருடம் இறுதியிலிருந்து காலநிலையில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க மாற்றங்களை அவதானிக்கும் போது 100 ஆண்டுக்கு ஒருமுறை ஏற்படும் கொடிய வரட்சியையே தற்போது நாங்கள் அனுபவிக்கத் தொடங்கியுள்ளோம் என்பது தெளிவாகிறது என கலாநிதி பானபொக்க தெரிவித்தார்.

இவ்வாண்டில் ஏற்படவுள்ள கொடிய வரட்சி 1879ஆம் ஆண்டில் ஏற்பட்ட வரட்சியை விஞ்சக்கூடும்.

அதிகரித்து வரும் சனத்தொகையும், நீர் பாவனை அதிகரிப்பும், விவசாயம் மற்றும் கைத்தொழிற் துறைகளுக்கு அதிகளவு நீர் பயன்படுத்தப் படுவதுமே இதற்கான முக்கிய காரணங்களாகும் என்றும்—

நிலைமையைக் கருத்திற்கு கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடின் மார்ச் மாதமளவில் நிலைமைகள் மோசமடையலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

## தாக்குதல் நடைபெறும் பகுதிகளுக்கு படை நகர்வு?

கிழக்குக்கு நகர்த்தப்படும் படைகளை, புலிகள் அதிகம் தாக்குதல் நடத்தும் வெலிகந்த, அம்பாறை, மட்டக்களப்புநகர், வாழைச்சேனை ஆகிய இடங்களின் முன்னணி நிலைகளில் நிறுத்துமாறு மட்டக்களப்பில் உள்ள இராணுவ மூன்றாம் பிரிவினர் கேட்டுள்ளனர்.

கிழக்கில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு நகர்த்திய படையினரில் ஒரு பகுதியினரை மீண்டும் கிழக்கே கொண்டு செல்ல முடியாத நிலை இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## வெங்காயச் செய்கையில் விவசாயிகள் நாட்டம்

வியாபாரிமூலை ஜன. 18

வடமராட்சி பகுதி விவசாயிகள் இம்முறை வெங்காய பயிர்ச்செய்கையில் அதிக ஆர்வம் காட்டிவருகின்றனர்.

மந்திகை, அல்வாய், தம்பசிட்டி, இன்பருட்டி, வியாபாரி மூலை போன்ற இடங்களில் உள்ள தோட்டங்களில் பெருமளவு வெங்காயம் நடப்பட்டுள்ளது.

உரியகாலத்தில் இம்முறை மழை பெய்யத்தவறியதால் நெற்செய்கை விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைந்துள்ளனர்.

நெற்செய்கையால் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்யும் வகையில் மேட்டுநிலப் பயிரான வெங்காயம், மிளகாய் போன்ற பயிர்களை இம்முறை அதிக அளவில் அவர்கள் செய்கை பண்ணி வருகின்றனர். (இ-152)

## மோ. சைக்கிள் விபத்துகள்

மந்திகை, ஜன. 18

சாவகச்சேரி கண்டி வீதியில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் எதிரும் புதிருமாக மோதுண்டு இடம்பெற்ற இவ்விபத்தில் யாழ்ப்பாணம் நீராவியடியில் இருந்து இடம்பெயர்ந்து மிருசுவிலில் வசிக்கும் மாரியப்பா நாகரட்ணம் (வயது 72) என்பவரே படுகாயமடைந்தார்.

காயமடைந்தவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மந்திகை ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

★ ★ ★

அருகருகாகச் சென்ற இரு மோட்டார்சைக்கிள்கள்ஒன்றுடன் ஒன்று உராசியதில் ஏற்பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிள்களில் வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் காயமடைந்தனர்.

அல்வாய் மாலுசந்திக்கு சமீபமாக திங்கட்கிழமை இரவு இடம் பெற்ற இந்த விபத்தில் சாவகச்சேரி டச்சு வீதியைச் சேர்ந்தவர்களான ஆறுமுகம் பவளமலர் (வயது 25) அவரது சகோதரரான ஆறுமுகம் ராஜபாலு (வயது 31), முத்துவேலு அன்னம்மா [வயது32], அவர் மகள் முத்துவேலு அம்பிகா [வயது11] ஆகிய நால்வருமே காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [இ-173-118-15]

## இந்து இளைஞர் பேரவையின் வன்னிக் கிளை

வட பிரதேச இந்து இளைஞர் பேரவையின் வன்னிப் பிராந்தியத்துக்கான கிளை அங்குரார்ப்பண விழா சங்கீத பூசணம் சந்திரசேகரம் தலைமையில் கிளிநொச்சி மகாவித்தியாலய கலையரங்கில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம், திட்டமிடல் பணிப்பாளர் திரு. இராசநாயகம், அகில இலங்கை இந்து இளைஞர் பேரவை உபதலைவர் திரு. சிவலோகநாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (இ-79)

# கப்பலில் இருந்த சீனியை கடத்த முயன்ற 45 பேர்!

## பொலிஸார் கைது செய்தனர்

கொழும்புத் துறைமுகத்திற்கு வெளியே நங்கூரமிட்டுத் தரித்து நின்ற கப்பல் ஒன்றிலிருந்து சீனியைக் கடத்திக்கொண்டிருந்த 45 பேர் துறைமுகப் பொலிசாரால் கடந்த 14 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

கடந்த 8 மாதங்களாக இக்கப்பல் கொழும்புத்துறைமுகத்திற்கு வெளியே சுமார் 4 மைல் தூரத்தில் ஹெந்தலக் கடற் பகுதியில் நங்கூரமிட்டு நிற்கின்றது, இக்கப்பலுக்குப் பாதுகாப்பு வழங்கும் பணி நான்கு உள்ளூர் முகவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இக்கப்பலில் இருந்து தினமும் சீனி களவாடப்படுவதாக இந்த முகவர்கள் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்திருந்தனர். இதைத் தொடர்ந்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட கடல் முற்றுகையின் போதே 45 போ கைதுசெய்யப்பட்டுள்ளனர். (உ-10)

# செஞ்சிலுவை சர்வதேசகுழு இலவசமாக சவர்க்காரம்

## இடம்பெயர்ந்தோருக்கு கிடைக்கும்

வலிகாமம் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் தங்கியுள்ளவர்களுக்கு வழங்கவென யாழ். அரச அதிபரிடம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு வழங்கியுள்ள ''லைவ்போய்'' சவர்க்காரம் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் கிராம சேவையாளர்களினால் விநியோகிக்கப்படவிருக்கிறது

இடம் பெயர்ந்தவர்கள் தற்சமயம் தங்கியுள்ள பகுதிகளில் உள்ள நிரந்தர கிராம சேவையாளரிடம் 22 ஆம் திகதி முதல் பங்கீட்டு அட்டை, குடும்பப் பதிவு அட்டை, அடையாள அட்டை ஆகியவற்றை சமர்ப்பித்து இந்த சவர்க்காரத்தை பெறலாம் என்று யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

குடும்பத்தில் உள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கைப்படி ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒவ்வொரு கட்டி என்ற அடிப்படையில் சவர்க்காரம் வழங்கப்படும் என்றும் —

ஆகக் கூடியது ஒரு குடும்பத்துக்கு 5 கட்டிகள் சவர்க்காரமே வழங்கப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

# நிதித்துறை அறிவித்தல்

## வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு நாளை 19 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

★ அன்னம்மா முத்துக்குமாரு அல்லது செல்வி. ஜெயா முத்துக்குமாரு — சம்பியன் ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

★ திருமதி புவனேஸ்வரி பிரகலாதன் — 106, புங்கன்குளம் றோட், அரியாலை, யாழ்ப்பாணம்.

★ திருமதி சந்திரா றொபேந்திரகுமார் — சாந்தி நிலையம், சித்தங்கேணி. (தற்போதைய முகவரி: சாவகச்சேரி)

★ கந்தசாமி வசந்தரூபன், அளவெட்டி தெற்கு, அருவம்பற்று, அளவெட்டி, யாழ்ப்பாணம்.

★ கனகாம்பிகை முத்துராசா — 10, பொன்னம்பலம் றோட், அரசடி லேன், அரியாலை, யாழ்ப்பாணம்

★ செல்லத்துரை நவரட்ணராஜா — மோட்டார் கராஜ், உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

★ கந்தசாமி ரங்கநாதன் (பொன்னம்மா) — 'குகாநந்தவாசா', வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.

★ A. இரத்தினம்— 55, சிவன் புதுறோட், நல்லூர், யாழ்ப்பாணம்.

★ திருமதி ந. விஜயராசா — 158/6, கண்டிவீதி, அரியாலை.

★ இராசரட்ணம் சட்டநாதன் (ப. நோ. கூ. கிளை) — சம்பியன் ஒழுங்கை, கொக்குவில்.

★ திருமதி ராசம்மா தம்பிராசா—227, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

★ திருஞானசம்பந்தன் கதிரவேலு - செட்டிக்குறிச்சி, பண்டத்தரிப்பு.

★ திருமதி குணசிறி சிவப்பிரகாசம் அல்லது செல்வி மகாலக்ஷ்மிசிவப்பிரகாசம்—12, ஈச்சமோட்டை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

★ சண்முகராசா மோகனதாசன் – அராலி மத்தி, அராலி. (வட்டுக்கோட்டை)

★ குமாரராயா இராசலிங்கம் — 13/11, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, அரியாலை, யாழ்ப்பாணம்.

★ வசந்தி ரஞ்சித் (மரிய கொரற்றி) — 42/6A, மவுண்காமல்வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

★ கணபதி பசுபதி — கெரலிவத்தை ஒழுங்கை, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

★ கந்தையா காசிப்பிள்ளை (இளைப்பாறிய நில அளவையாளர்) — 6, புனித அன்னம்மாள் வீதி, மானிப்பாய்.

★ திருமதி பூமணி பொன்னுத்துரை — ''இரதிவாசம்'' இணுவில் மேற்கு, இணுவில், சுன்னாகம்.

★ மயில்வாகன இராசரத்தினம் (M D கனகரத்தினத்தின் அண்ணன்) குமரபதி, தொட்டிலடி, சண்டிலிப்பாய்

★ அன்ரனி பாலதாஸ் — 797, கடற்கரை வீதி, பாசையூர் (மடு தட்சனாமடத்தில் உள்ளார்கள்)

★ சபாசிவம் முத்துக்குமாரசாமி — இணுவில் மேற்கு, இணுவில்.

★ கந்தையா இராசரட்ணம் (இளைப்பாறிய ஆசிரியர்) — ஏழாலை வடக்கு, ஏழாலை

(இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வல்வையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலாளர்களும் என சுமார் நூறு பேர் வரை கூடியிருந்தனர்.

தெய்வாதீனமாக முதல் ஷெல் வீடு ஒன்றின் மீது விழுந்ததால், துறையில் கூடியிருந்தவர்கள் கடலில் பாய்ந்தும், சிதறி ஓடி நிலத்தில் வீழ்ந்தும் பாதுகாப்புத்தேடிக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து அடுத்தடுத்து ஏவப்பட்ட மூன்று ஷெல்கள் வல்வெட்டித்துறைச் சந்தைப்பகுதியில் வீழ்ந்து வெடித்தன. காலை எட்டு மணிக்கு வியாபாரத்திற்காகவும், பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காகவும், வேறு கருமங்களுக்காகவும் அப்பகுதிக்கு வந்திருந்த மக்கள் மத்தியில் விழுந்த இந்த ஷெல்களினாலேயே உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டன.

பஸ் நிலையம், பிரதான வீதி, சந்தை ஆகியன அருகருகே அமைந்த இப்பகுதியில் விழுந்து வெடித்த ஷெல்களினால் சந்தைக்கு வந்திருந்த மூவர் உடல் சிதறி அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

மற்றைய இருவர் படுகாயமுற்று பின்னர் உயிரிழந்தனர் மற்றும் ஏழு பேர் படுகாயமடைந்தனர்.

சந்தைப் பகுதியில் விழுந்த ஷெல்லினால் சைக்கிள்கடை, எரிபொருள் விற்பனை நிலையம், பலசரக்குக்கடைகள் என்பன சேதமடைந்தன.

வல்வெட்டித்துறை சிவன் கோவில்பின்பக்கமாக விழுந்த ஷெல்லினால் கோவில் மடமும், கோவிலும் சேதமடைந்தன.

நேற்றைய தாக்குதல்களின் போது ஏவப்பட்ட எட்டு ஷெல்களில் ஐந்து வல்வெட்டித்துறையிலும், ஒன்று மயிலியதனையிலும், இரண்டு தொண்டமானாறு, ஊரிக்காடுப் பகுதிகளிலும் விழுந்துவெடித்தன.

(உ-13-15-80-173)

---

திலாசு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தம் 35 லொறிகளில் அவை எடுத்துச் செல்லப்பட்டன என்றும்—

இனிமேல் நாளாந்தம் 50 லொறிகளில் மண்எண்ணெய் உட்பட பொருள்களை அனுப்ப ஏற்பாடாகி உள்ளது என்றும் —

அவர் தெரிவித்தார்.

(அ-3)

---

# தீர்வுத் திட்ட சட்டவரைவை ஐ.தே.க. பொறுப்புணர்வுடன் பரிசீலிக்கிறதாம்!

## அக்கட்சியின் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, ஜன. 18

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு முன்வைத்துள்ள தீர்வுத் திட்ட சட்டவரைவை ஐக்கிய தேசியக் கட்சி பொறுப்புணர்வுடன் பரிசீலனை செய்யும்.

ஐ. தே. கவின் கண்டி மாவட்ட எம். பியான சரத் அமுனுகம இவ்வாறு கூறினார்.

சட்டவரைவை எமது கட்சி இப்போது பரிசீலிக்கின்றது. அதன் பின்னரே கட்சியின் நிலைப்பாடு உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும்.

மேலெழுந்தவாரியாக நோக்கும் போது முன்னர் அரசு சமர்ப்பித்த யோசனைகளை விட இப்போது முன்வைக்கப்பட்டுள்ள சட்டவரைவில் ஏமன்னேற்றகரமான சில அம்சங்கள் காணப்படுகின்றன.

குறிப்பாக —

நாட்டின் ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தும் விடயம், எல்லைகள் மற்றும் காணிகள் குறித்த விடயங்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

அதிகாரப் பரவலாக்கலுக்கு நாம் எதிரானவர்கள் அல்லர். இலங்கை — இந்தியா ஒப்பந்தத்தைச் செய்ததும் அரசமைப்புக்கு 13 ஆவது திருத்தத்தைக் கொண்டுவந்ததும் எமது கட்சி அரசாங்கமே. — இவ்வாறு அவர் மேலும் குறிப்பிட்டார்.

(உ-6)

---

## வீரவணக்கம்

சாவகச்சேரி, ஜன. 18

கடந்த 11 ஆம் திகதியன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் 2 போராளிகள் விரச்சாவடைந்தனர்.

மேஜர் ரஞ்சன் (தங்கவேலு கேதீஸ்வரன்-கீரிமலை), லெப்டினன்ட் ஜெயமோகன் அல்லது ஓவியன் (சொக்கலிங்கம் நகுலேஸ்வரன் — மூதூர்) ஆகிய போராளிகளே வீரமரணமடைந்தவர்களாவர்.

(உ-3)

---

பலியான...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளும் சின்னாபின்னமாகி சதைத் துண்டங்கள் தூர வீசப்பட்ட நிலையில் காணப்பட்டன.

★ பூதத்தம்பி கிருஷ்ணமூர்த்தி (வயது 40). மீன் வியாபாரியான இவர் நான்கு பிள்ளைகளின் தந்தையாவார். மீன் கொள்வனவுக்காக வல்வெட்டித்துறைக்குச் சென்றிருந்த சமயம் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமுற்றார். மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டபோது அங்கு மரணமானார்.

★ வேலாயுதம் யசோதா (வயது 18). சிவபுர வீதியைச் சேர்ந்தவர். ஆபத்தானநிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்படும்போது இடை வழியில் மரணமானார்.

(உ-15-173)

---

காயமுற்ற. .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ செல்லையா இராசலிங்கம் (வயது 68)

— இந்த நால்வரும் வல்வெட்டித்துறை ஆஸ்பத்தியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

இவர்களைத் தவிர —

★ சிதம்பரப்பிள்ளை இராசேந்திரம் (வயது 40) — வல்வை சிவபுரம் வீதியைச் சேர்ந்த இவர் வல்வைச் சந்தியில் வாடகைக்கு கார்வைத்து ஓட்டிவந்தவர். கழுத்தில் காயமடைந்த இவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

★ சுப்பையா ரவிச்சந்திரன் [வயது 22] — நெடியகாட்டைச் சேர்ந்தவர்.

— இவர்கள் இருவரும் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மயிலியதனையில்

மயிலியதனையில் விழுந்து வெடித்த ஷெல்லினால் —

★ செல்லத்துரை செல்லபாக்கியம் (வயது 60) இவரும் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ- 15- 173)

---

ஊழல் குற்றச்சாட்டு:

## 3 இந்திய அமைச்சர்களும் நேற்று இராஜினாமா!

சட்டவிரோதமாக பணக் கொடுக்கல், வாங்கலில் ஈடுபட்டதாக இந்திய மத்திய புலனாய்வுத் துறையினரால் குற்றம் சாட்டப்பட்ட ஏழு அரசியல் பிரமுகர்களில் அமைச்சர்களான மூவர் தமது அமைச்சர் பதவிகளை நேற்று இராஜினாமாச் செய்தனர்.

பிரதமர் நரசிம்மராவின் நெருங்கிய அமைச்சரவைச் சகாக்களான வித்யாசரண் சுக்ளா, பல்ராம் ஜாக்கர், மாதவராவ் சிந்தியா ஆகியோரே நேற்று தமது இராஜினாமாக் கடிதங்களைச் சமர்ப்பித்தனர்.

(உ-3)

---

தீாவுத திட்டம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையால் நிறைவேற்றிய பின்னர் அது மக்கள் முன் சர்வசன வாக்கெடுப்புக்காக விடப்படும்.— இவ்வாறு அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார்.

இச்சட்ட வரைவு புலிகளுக்கும் சமர்ப்பிக்கப்படுமா என்று கேட்கப்பட்ட போது அதற்குத் தெளிவான பதில் எதனையும் அமைச்சர் தெரிவிக்கவில்லை.

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மக்களுக்குமே இச்சட்டவரைவு சமர்ப்பிக்கப்படுவதாக அவர் சொன்னார்.

(உ–3-6-7)

---

## வயிற்றோட்ட பாதிப்பு

வயிற்றோட்ட நோயினால் பீடிக்கப்பட்டு நீண்ட நாள் வார்ட்டில் இருந்து சிகிச்சை பெற்றுவந்த வயோதிபப் பெண் ஒருவர், செப்ரிசீமியாவின் தாக்கத்திற்குள்ளாகி நேற்று மந்திகை அரசினர் வைத்தியசாலையில் மரணமானார்.

மேலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சிறுபிள்ளைகள் வயிற்றோட்டம், காய்ச்சல் காரணமாக நேற்று மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இக்குடும்பத்தைச் சேர்ந்த மற்றொரு சிறுவன் பளையில் சிகிச்சை பெற்று வருகிறான்.

---


## இளிநொச்சியில்

# ஜெயா அழகு மாடம்

(நீதிமன்றம் முன்பாக)

யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த ஜெயா அழகு மாடம் தற்பொழுது கிளிநொச்சியில் இயங்குகிறது என்பதை அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

இமிரேஷன் கோல்ட் கவறிங் நகைகள், அழகு சாதனப்பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள், பிளாஸ்டிக் வகைகள், லேஸ் நூல் வகைகள், சிறுவர்களின் பாவனைப்பொருள்கள், விளையாட்டுப் பொருள்கள், சில்வர் பாத்திரங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

ஜெயா அழகு மாடம்

177 எ 187, மின் நிலைய வீதி,

யாழ்ப்பாணம்.

(சி/3153)



## வடமராட்சியில்

# உதய சேவை

## வடமராட்சி வாழ் மக்களே!

காலை எழுந்தவுடன் உங்களைத்தேடி உங்கள் நண்பன் ஒருவன் ஓடி வருகின்றான்.....

ஆம்; உண்மை தான்....!

உங்கள் அபிமான நாளிதழ் உதயனை உதய வேளைப் பொழுதில் உங்களது வீட்டிலேயே பெற்றுக் கொள்ள

உதய சேவை

ஆரம்பமாகிவிட்டது

விவரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளுங்கள்:

**உதயன் கிளை நிலையம்**

பழைய பஸ் நிலைய சதுக்கம், பருத்தித்துறை.


## மரண அறிவித்தல்

### இளையதம்பி கனகசபை

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளையதம்பி கனகசபை நேற்று (17-1-96) காலமானார்.

இவர் வடிவீஸ்வரியின் அன்புக் கணவரும், மன்மதராசா [பிரான்ஸ்], ஜெகதீஸ்வரி [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியநாதன் [பிரான்ஸ்] திருச்செல்வி [பிரான்ஸ்] ஆகியோரின் அன்பு மாமானரும், காயத்திரி, கார்த்திகா, தீப்தி ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [18-1-96] வியாழக்கிழமை கைதடி நுணாவிலில் பகல் 2 மணியளவில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

இ. சுப்பிரமணியம்

[மைத்துனர்]

மே/பா ச.குகபாலன் [தபாலதிபர்]

கண்டி வீதி,

கைதடி, நுணாவில்,

சாவகச்சேரி.

(40196)

---


சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகளின் கைராசியான

# யாழ். திருமாட்டி (சீமாட்டி) புடைவைக் கடல்

தற்பொழுது சாவகச்சேரி நவீனசந்தை மேல்மாடி 12 ஆம் இலக்கத்தில்

கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை எமது அன்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

★ எமக்கு வேறு கிளைகள் இல்லை ★

(சி/2926)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிக பணிமனையில் 18-01-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org